பருத்தித்துறை
யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்
# நிறுவுனர் தினம்



அமரர் திரு. வை. வேலாயுதம்பிள்ளை

## நிறுவுனர் தின பேருரை

கொழும்பு தமிழ்ச்சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபம்
07.08.2010 சனிக்கிழமை

**பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா**
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

*யா/ வேலாயுதம் மகா வித்தியாலய, பழைய மாணவர் சங்கம்*
*கொழும்பு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# பாடசாலைக் கீதம்

பல்லவி

ஞானமிளிர் பாடசாலை நலம் பெறவே
புகழொடு கலையகம் வாழியவே

(ஞான)

அனுபல்லவி

அன்புடன் அறிவுமிக்க சிறந்த ஆற்றலும்
சீர்புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலயம்

(ஞான)

சரணம்

காரணர் வேலாயுதம் சேயவர் அருணாசலம்
எனமேவு பெரியார் கல்வி அழகொளியாய்
கலையறிவே விஞ்ஞான போதமே
கவின்கலைகளும் பெற்று பலபெரு வளமொடு

(ஞான)

நெறிதரு நிலைகளும் நிலைபெறச் செய்திடும்
காளியர் கோன்காத்த சைவ கலாச்சாரம்
காசினி மகிழ்ந்திட பொங்கு ஈசன் அருள்தங்கு
அருளொளியாய் அன்புருவாய் அறிவொடு நிறைந்து

(ஞான)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் அரை வாய்மொழிப் பாடல்கள்

**அறிமுகம் :-**

ஆங்கிலத்தில் Orature என வழங்கும் சொல்லைத் தமிழில் அரைவாய் மொழிப்பாடல் என அழைக்கும் மரபு இன்று பெரு வழக்காய் உள்ளது. இன்னும், எழுத்து நிலைப்பட்ட வாய் மொழிப்பாடல் என்றும் ஒருபுடைவாய் மொழிப்பாடல் ( Semi oral) என்றும் மூன்றாவது வகையான இலக்கியப் பாரம்பரியம் என்றும், இன்னொரு வகையான வாய்மொழிப்பாடல் மரபு என்றும் அழைக்கின்றனர்.

சுரேஷ் கனகராசா Orature என்பதை வாய்மொழித் தமிழ் இலக்கியம் எனத் தமிழாக்கம் செய்துள்ளார்.[1]

தமிழகத்து அறிஞர்கள் Orature ஐ முச்சந்தி இலக்கியம் என்றும், குயிலி இலக்கியம் என்றும் அழைக்கின்றனர்.[2]

தமிழில் நீண்டதோர் வாய்மொழி இலக்கியப் பாரம்பரியம் உண்டு. அவ்வாறே எழுத்து நிலைப்பட்ட இலக்கியங்களுக்கும் நீண்ட வரலாறு உண்டு. சங்கப் பாடல்கள் வாய்மொழியாக வழங்கிப் பின்னர், எழுத்துருப் பெற்றவை எனப் பேராசிரியர் கைலாசபதி கூறுவார். கைலாசபதியின் கருத்தினை வழிமொழியும் வகையிலே சங்கப் பாடல்களில் வாய்மொழி மரபின் தாக்கம் பெருமளவுக்கு உண்டு என்று செ.வை. சண்முகம் குறிப்பிடுவர்.[3]

நாம் இந்த உரையிலே Orature என்ற பொருள் விவாதத்தில் ஈடுபடவில்லை. ஈழத்து மரபில் Orature என மேலைப்புலத்தவர் இனங்காட்டிய இலக்கிய மரபொன்று தொடர்ந்து வந்துள்ளது, என்பதனை மறுக்க முடியாது. பெரும்பாலும், வழக்கிழந்து போகும் Orature மரபினை இனங்கண்டு ஈழத்து இலக்கிய மரபிலே இதன் வகிபாகத்தை முன்னெடுத்தவர்களாகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி செ. யோகராசா, பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு போன்றோரைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் நிறையவே நிலவி வந்த இந்தப் பாடல் மரபு பற்றி, வடிவ அடிப்படையிலும், பண்பாட்டியல் கூறுகளின் அடிப்படையிலும் எம்மால் ஏலவே, சில கட்டுரைகள் எழுதப்பட்டன.

கலாநிதி செ. யோகராசா மட்டக்களப்புப் பிரதேசத்திலும், மலையகத்திலும் வழங்கும் அரைவாய் மொழிப் பாடல்கள் பற்றி எழுதிய கட்டுரைகளின் அருட்டுணர்வால் ஏற்பட்டதே யாழ்ப்பாணத்து அரைவாய் மொழிப்பாடல்கள் என்ற இந்த உரையாகும்.

**அரை வாய்மொழிப் பாடல் மரபு :-**

யாழ்ப்பாணத்தில் அரைவாய் மொழிப் பாடல்களின் வருகையையும், பயன்பாட்டையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தே காணமுடிகின்றது. இப்பாடல் மரபுக்கும், அச்சியந்திரத்தின் பயன்பாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான அச்சுக்கூடங்கள் அரைவாய் மொழிப் பாடல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளன. பாட்டுக் கட்டுந் திறன் படைத்த பலர், சமூகச் சார்பான செய்திகளை, நிகழ்ச்சிகளை ஏதோ ஒரு பா வடிவிலே சிறுசிறு நூல்களாகவோ, துண்டுப் பிரசுரங்களாகவோ அச்சிட்டு, மக்கள் கூடுமிடங்களிலே பாடிக்காட்டி விற்பனை செய்து வந்துள்ளனர்.

பொதுமக்களை நோக்கிய வகையிலே பாடிக் கையளிக்கப்பட்ட இப்பாடல் மரபு பின்னர், அச்சுப்பிரதிகள் இல்லா தொழிந்த காலத்திலும் மக்கள் மத்தியில் வாய்மொழியாக நின்று நிலவுவதாயிற்று. யாழ்ப்பாணத்து அரைவாய் மொழிப் பாடல்கள் பலவற்றை இன்று, வாய்மொழி மரபாக மாத்திரமே பெற முடிகின்றது. இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன்னர், ( 1978, 79 ) நம்மால் தேடித் தொகுக்கப்பட்ட பாடல்கள் பல அச்சுப்பிரதி யிலிருந்து வாய்மொழியாக வழங்கி வந்தவையே என்பதுங் குறிப்பிடத்தக்கது. இதனாலே, இவற்றை இயற்றியோரின் பெயர்களை அறிய முடியாதுள்ளது.

யாழ்ப்பாணத்து அரைவாய் மொழிப்பாடல்கள் பலவற்றைப் பாடியோருட் பலர் கல்விப் புலமை இல்லாதவர்கள் என்பது உண்மையே. எனினும், கல்விப் புலமையுள்ள சிலரும் அந்த அரைவாய் மொழிப் பாடல்களைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவுக்கு எழுத வாசிக்கத் தெரிந்திருந்தும், பாடல் எழுத முடியாத ஆனால், நன்றாகப் பாடக்கூடிய சிலர் கல்விப் புலமையாளர்களை அணுகிச் சில சமூகச் செய்திகளைப் பாடுவித்தும், அச்சடித்தும் மக்கள் கூடும் இடங்களிலே பாடிக் காட்டி விற்பனை செய்தமைக்கான சான்றுகளும் உள்ளன.

இந்த அரைவாய் மொழிப் பாடல்கள் பல யாப்பு நெறிப்பட்டனவாக அமைந்துள்ளமையும் அவதானிப்புக்குரியது. பழக்கப்பட்ட ஓசை வழிவரும் ஒத்திசைவுப் பாங்கிலே பாடப்பட்ட இந்தப் பாடல்களைப் பாடியவர்கள், ஏதோ ஒரு வர்ண மெட்டையே மனங்கொண்டு பாடி வந்தனர். அச்சேறிய நூல்களிலும். வர்ணமெட்டைக் குறிப்பிட்டுள்ளமையைக் கண்டுகொள்ளலாம்.
(பாடல்களைக் குறிப்பிடுமிடத்து இதற்கு உதாரணங்காட்டுவோம்)

அரைவாய் மொழிப் பாடல்களைத் திருவிழாக்கள், சந்தைகள் முதலான இடங்களிலே பாடிக் காட்டி விற்பனை செய்வதோடு நாடகங்கள், கூத்துக்களிலே இடைப்பிறவரலாக இப்பாடல்களைப் பாடிக் கையளித்தும் வந்தனர். சாதாரண பொது மக்களுக்குச் சமூகச் செய்திகளை. மாற்றங்களை, பரபரப்பான செய்திகளைச் சொல்வதில் அரைவாய் மொழிப் பாடல் மரபு வெற்றி பெற்றதென்றே கூறவேண்டும். உயர் இலக்கியமெனும் செந்நெறி இலக்கியம் சொல்லாத அல்லது, சொல்லத் தவறிய அல்லது, சொல்ல விரும்பாத செய்திகளை அரைவாய் மொழிப் பாடல்கள் சொல்லியுள்ளன, என்பதனை மறுக்க முடியாது.

அரைவாய் மொழிப் பாடல்கள் சிந்து, கும்மி, அம்மானை, கீர்த்தனை முதலிய வடிவங்களிலேயே பெரும்பாலும் பாடப்பட்டன. சிறுபான்மையாக வெண்பா, விருத்தம், அகவல் முதலியவற்றிலே பாடப்பட்டதும் உண்டு. ( உதாரணம் பின்னர் காட்டுவோம் )

யாழ்ப்பாணத்தில் எழுந்த அரைவாய் மொழிப் பாடல்களை எண்ணிக்கை அடிப்படையிலே நோக்கும் பொழுது, கும்மிப்பாடல்களே பெருமளவுக்குக் காணப்படுகின்றன. இதற்கான பிரதான காரணமாக இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று : கும்மிப்பாடல்களின் இசை, (ஆடிப்பாடக்கூடிய அம்சம்)
இரண்டு : சமூகச் செய்திகள் சொல்லக்கூடிய வடிவமாகக் கும்மிப் பாடல்களைப் 19 ஆம் நூற்றாண்டுக் கல்வியாளர்களும் அங்கீகரித்தமை.

கல்வியாளர்கள் அங்கீகரித்தமைக்கு உதாரணமாக, முத்துக்குமார கவிராசரின் ஞானக் கும்மியை ஆறுமுக நாவலர் இருமுறை அச்சிட்டு வெளியிட்டமையைச் சுட்டிக் காட்டலாம். மதமாற்றத்தைக் கண்டித்து எழுதப்பட்ட இக் கும்மிப் பாடல் பொதுமக்களை நோக்கியே எழுதப்பட்டுள்ளது. மதமாற்றத்தை நியாயப்படுத்திக் கிறிஸ்தவர்களும் கும்மிப் பாடல்கள் பாடியுள்ளனர். பொதுமக்களை நோக்கித் தமது கருத்துக்கள் செல்ல இப்பாடல் வடிவம் பெரிதும் உதவியது எனலாம். இன்றும் இப்பாடல்களில் சில வாய்மொழி மரபாகப் பேணப்படுவதைக் கண்டுகொள்ளலாம். "தெருவோரப் பாடல்களில் கோலோச்சிய வடிவங்களில் கும்மியும், சிந்தும் தலையானவை என்று டாக்டர். ஆ. இரா.வேங்கடாசலபதி குறிப்பிடுவார். (முச்சந்தி இலக்கியம் பக். 41) அரைவாய்மொழிப் பாடல்களையே தெருவோரப்பாடல்கள் என்று வேங்கடாசலபதி குறிப்படுகின்றார், என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

அரை வாய்மொழிப் பாடல்களின் முக்கியமான பொருள் அமைதியினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. ஊர்கள் தோறும் நிகழுகின்ற முக்கியமான சம்பவங்கள்.
   - கொலை
   - களவு
   - பெண்கடத்தல்
   - கோட்டு வழக்குகள்
   - தொற்று நோய்கள் முதலானவை.

2. சமூக சீர்திருத்தம்
   - மதுவிலக்கு
   - உடைநடை பாவனை

3. சமூகக் குறைபாடுகள்
   - சாதி
   - சமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பிரதேச வரலாற்றுச் செய்திகள்
5. அரசியல்
6. பக்தி
7. வசைபாடுதல்

**ஊர்கள் தோறும் நிகழுகின்ற முக்கியமான சம்பவங்கள்.**

ஊர்கள் தோறும் நிகழுகின்ற முக்கியமான சம்பவங்களை உடனுக்குடன் பாடலாக இயற்றி, மக்கள் கூடுமிடங்களிலே பாடிக் காட்டிப் பொதுமக்களுக்குக் கையளித்தனர். எழுத்து நிலைப்பட்ட ஆனால், வாய்மொழியாகக் கையளிக்கப்பட்ட அரை வாய்மொழிப் பாடல்கள் இன்றும் சில முதியவர்களின் வாயில் தவழுவதைக் கண்டுகொள்ளலாம்.

ஊர்கள் தோறும் நிகழ்ந்த கொலைகள், கொள்ளைகள், பெண்கடத்தல், கோட்டு வழக்குகள், தொற்று நோய்கள் முதலானவை பற்றிய அரை வாய்மொழிப்பாடல்கள் பல யாழ்ப்பாணத்திலே தோற்றம் பெற்றுள்ளன. அவை முழுவதையும் இன்று தேடிப் பெறுவதோ, கேட்டறிவதோ முடியாத காரியம் ஆகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட சேனாதிராசா கொலை பற்றி, அரை வாய்மொழிப் பாடல்கள் பல தோற்றம் பெற்றுள்ளன. அக்ஷய வருஷம் பங்குனி மாதம் வெளிவந்த (1920) ஸ்ரீமான் சேனாதிராசா கொலை விசித்திரக் கவிகள் முதலாம பாகம் என்னும் நூல் இருபது பக்கங்களைக் கொண்டது. இதனை இயற்றியவர் திருநெல்வேலி M.R. வித்தியாவல்லி அம்மாள் என்பவர். இந்த நூலின் முன்னட்டையிலே பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இது முன்னர் வெளிவந்த புத்தகங்களிலும் பார்க்கச் சரித்திரம் தொடர்பாக வீரம், சோகம், தாபம் முதலிய சகல விபரங்களும் அடங்கிய வெண்பா, விருத்தம், கலித்துறை, கும்மி, சிந்து முதலிய நூதன மெட்டுக்களாற் பார்ப்பவர் மனதைப் பிரமிக்கச் செய்யத் தக்க விதமாகவியற்றியது"

இந்த முகப்பு வாசகத்திலிருந்து சேனாதிராசா கொலை பற்றி இந்நூல் வெளிவருவதற்கு முன்னரே வேறு பாடல்களும் வெளிவந்துள்ளன என அறிய முடிகின்றது. இன்றும் முதியோர் வாயில் வழங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"பண்டாரக் குளத்தடி முத்தன்*
*கொண்டானே சேனாதி ராசாவை"*

என்ற பாடல் இந்நூலில் இடம்பெறவில்லை. இப்பாடல் இந்நூலுக்கு முன்தோன்றிய பாடலாக இருக்க வேண்டும்.

இந்த அரை வாய்மொழிப் பாடல் நூல் ஒரு பெண்ணினாற் பாடப்பட்டமை மிகவும் அவதானத்துக்குரியது. ஈழத்து அரை வாய் மொழிப் பாடல் மரபில் "பெண்பாற்புலவர்களும்" இருந்திருக்கிறார்கள் என்பதும் மனங்கொள்ளத்தக்கது. இந்த நூலின் அவையடக்கம் பின்வருமாறு :-

*"கண்மணியாகிய சேனாதிராசன் கதைகளையோர்*
*பெண்மணியாகிய பேதை கவிவழி பேசியதால்*
*பண்ணிசை குற்றம் பார்த்துப் பிடித்திடும் பாவலர்கள்*
*விண்மணியாம் என விரும்பியுரைத்து விளம்புவரே"*

நல்லூர்த் திருவிழாக் காலங்களில் இப்புத்தகத்தை ஒருவர் பாடிக்காட்டி விற்பனை செய்தார் என்று முதியவர் ஒருவர் கூறினார்.

'சேனாதிராசா விசித்திரக் கவிகள்' என்னும் நூலிலிருந்து வகைமாதிரிக்குச் சில பாடல்களைச் சுட்டிக் காட்டலாம்.

**நொண்டிச் சிந்து**

*சற்சனரே சொல்லக் கேளும் - இந்த*
*தாரணியெலாம் புகழும் கோவை நகரில்*
*சிற்பர னருளினாலே – சகல*
*செல்வமும் படைத்திலங்கும் நல்ல குலத்தில்*
*(சற்சனரே)*

*குன்றனைய குணம் படைத்தோன் - குமார*
*சூரிய குலத்துதித்த குழந்தை யென்பர்*
*வன்றிறல் சேனாதிராசா – என்று*
*வையகத்தார் சொல்லுவார்கள் ஐயா நேசர்கள்*
*(சற்சனரே)*

இவ்வாறு தொடங்கும் இப்பாடலைத் தொடர்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செந்நெல் செறி நல்லை நகர் வாசன்.." என்ற வர்ண மெட்டு எனவரும் பாடல் அமைகின்றது. அதைத் தொடர்ந்து 'பச்சைமலை, பவளமலை என்ற வர்ணமெட்டு' எனப் பின்வரும் பாடல் அமைகின்றது.

*"சாய வேட்டி யொன்றெடுத்து தானரையில் மாட்டி*
*தம்பி தானரையில் மாட்டி*
*தன்கையாற் சால்வைதனை தலையினிலே சூட்டி*
*வாயினிலே தாம்பூலத்தை வாங்கியவர் போட்டார்.*
*தம்பி வாங்கியவர் போட்டார்"*

இவ்வாறு அமையும் பல பாடல்கள் உள்ளன. மக்கள் கூடுமிடங்களில் இசையோடும் ஓரளவு அபிநயத்தோடும் பாடிக் காட்டத்தக்க வகையிலேயே அரை வாய்மொழிப் பாடல்கள் அமைந்தன.

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டளவிலே, யாழ்ப்பாணத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட கோகிலாம்பாள் கொலை வழக்குப் பற்றியும், பல அரை வாய்மொழிப் பாடல்கள் தோன்றின. பத்துச்சதம், இருபது சதம் என விற்கப்பட்ட இப்பாடல் நூல்களை நான் கண்டிருக்கின்றேன். இவற்றை இயற்றியவர்களின் பெயர்களை அறிய முடியவில்லை. ஆனால், இந்தப் புத்தகங்களைக் கையிலே கொண்டு பாடித்திரிந்து விற்பனை செய்தவரைக் கோயில் விழாக்களிலே கண்டிருக்கின்றேன். என் நினைவிலுள்ள ஒரு சிறு பகுதியை இங்கு சுட்டிக் காட்டுகின்றேன்.

*"உருத்திரபுரம் கேசு*
*உறுதியான கேசு*
*அழுத்தமாகப் பேப்பர்களைத்*
*திருத்தமாக நானும் பார்த்துப்*
*பொருத்தமாகப் பாடிவந்தேன் தெரியுமா? -இது*
*உருத்திரபுரம் கேசு தானே புரியுமா?"*

இந்த இடத்திலே முச்சந்தி இலக்கியம் என்னும் நூலை எழுதிய டாக்டர். ஆ. இரா. வேங்கடாசலபதி குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டுவது நலம் என்று கருதுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...... சாண்டில்யன் 1930 களின் இடைப்பகுதியில் சுதேச மித்திரன் நாளிதழில் நிருபராகப் பணியாற்றினார். அப்போது நீதிமன்ற வழக்கு விசாரணைகளைப் பற்றி விரிவாகச் செய்திகளை எழுதி வெளியிட்டிருக்கின்றார். அதைப்பற்றி அவர் பின்வருமாறு நினைவு கூர்ந்துள்ளார்.

குப்புபாய் கற்பழித்து வழக்கு, கிராமணி கொலை வழக்கு ..... அப்பொழுதெல்லாம் இந்தமாதிரி வழக்குக்களுக்கு அன்று மாலையே சூளைக் கவிஞரொருவர் பாட்டுப் போட்டு விற்பார். நான் வழக்குகளை வரிவிடாமல் குறுக்கு விசாரணை உட்படப் பிரசுரித்ததில் அவருக்கு அதிகம் வேலையில்லாது போயிற்று...." [4]

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஈழகேசரி, ஈழநாடு முதலான பத்திரிகைகள் கொலை வழக்குகள் பற்றிய விடயங்களை மிக விபரமாக வெளியிட்டன. இதனாலே பத்திரிகையின் விற்பனை அதிகரித்ததும் குறிப்பிடத் தக்கது.

பத்திரிகைகளைப் படிக்க முடியாதவர்களும், படிக்க வசதியற்றவர்களும் இத்தகைய கொலை வழக்கு விபரங்களை அரை வாய்மொழிப் பாடல்களினூடே அறிந்து இரசித்து வந்துள்ளனர். உணர்வு பூர்வமாகச் சிறப்பான ஓசையுடன் இவை பாடிக் காட்டப்பட்ட படியால் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து வாய் மொழியாகக் கையளிக்கப் பட்டன எனலாம்.

பரபரப்பான கொலைகள் பற்றி எழுந்த அரை வாய்மொழிப் பாடல்களைக் கூத்து, நாடகம் இவற்றுக்கிடையே (இடைப்பிறவர லாகப்) பாடும் மரபும் இருந்துள்ளது. பெரும்பாலும் ஹார்மோனிய வித்துவான் (பெட்டிக்காரன்) அல்லது பபூன் இத்தகைய பாடல்களைப் பாடுவதுண்டு. அறுபதுகளில் கீரிமலையில் நடைபெற்ற முக்கொலை பற்றிய அரை வாய்மொழிப் பாடல்கள் பல நாடக மேடைகளிலே பாடப்பட்டன. பார்வையாளர்களாலே பெரிதும் விரும்பப்பட்ட இந்தப் பாடல்கள் திரும்பத் திரும்ப நாடக மேடைகளிற் படிக்கப்பட்டதும் உண்டு. நினைவிலுள்ள பாடலின் ஒருபகுதி பின்வருமாறு:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"முக்கொலையே இது முழுக்கொலையே*
*இக்கொலை நடந்ததெங்கள் பக்கவூரிலே – அதைக்*
*கேட்க வேர்க்குமே - கண்*
*பார்க்கக் கூசுமே.."*

இத்தகைய பாடல் மரபு ஒரு காலத்திலே யாழ்ப்பாணத்திற் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதை மறுப்பது கடினம்.

செந்நெறிப்பாங்கான இலக்கியங்களைப் படைத்த மரபுவழிப் புலமையாளர்கள் சிற்றில சந்தர்ப்பங்களிலே பாடிய (இயற்றிய) பாடல்களும், அச்சு வாகனம் ஏறாது வாய்மொழியாகக் கையளிக்கப்பட்டுள்ளமையைக் கண்டுகொள்ள முடிகின்றது. மிக அண்மைக்காலம் வரை வாய்மொழியாக வழங்கிய முருகேச பண்டிதர் இயற்றிய பாடல்கள் சிலவற்றைத் தி. சதாசிவ ஐயர் பதிவு செய்துள்ளார்.

கோப்பாயில் நடைபெற்ற களவுச் சம்பவத்தைப் பற்றி முருகேச பண்டிதர் பாடிய பாடலையும் அரை வாய்மொழிப் பாடலாகக் கருதமுடியும். அந்தப்பாடல் பின்வருமாறு:-

*"வெள்ளை வேலன் வைரவன் காசிதான்*
*வீரனோ டருளம்பல மென்றிடும்*
*கள்வர் நால்வரும் கோவையிற் தன்மதம்*
*காட்டும் கென்ஸ்மன் வீட்டை நெருப்புறீ(க்)*
*கொள்ளை கொண்டு மறியலிற் சேர்த்திட(க்)*
*கூரையேறி இருவர் பிழைத்திட(ப்)*
*பள்ளனோ டருளம்பலமும் சிறைப்*
*பட்ட ஆண்டு விபவப் பெயரதே"*

முருகேச பண்டிதர் பாடியதாகக் கூறப்படும் இன்னொரு பாடலும் வாய்மொழியாக வழங்கி வருகின்றது. மல்லாகம் கோட்டு நீதவானாக இருந்த 'றைஸ்' என்பவர் வீதியோர முட்கிழுவை மரங்களை மட்டமாக வெட்டும்படி சட்டம் போட்டாராம். வெய்யில் காலம் ஆனபடியால் மரங்கள் பட்டுவிடும் என்று அவர் பாடிய பாடல் பின்வருமாறு:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"வெட்டி நட்ட முட்கிழுவை மெத்த உயரமென்று*
*மட்டமாய் வெட்ட 'ம'றைஸ் துரையும் - சட்டமாய்*
*இட்டானே கட்டளையை இட்டபடி யாகிலிது*
*பட்டுவிடும் பட்டுவிடும் பார்"*

செந்நெறிப்பாங்கான இந்தப்பாடலை அரைவாய் மொழிப் பாடலாகக் கொள்ளலாமா? என்பது ஆய்வுக்குரியது. புலவர் ஒருவராற் பாடப்பட்டு வாய்மொழியாக வழங்கி வரும் இப்பாடலை எந்த வகையில் உள்வாங்குவது என்பது பிரச்சினையாகவே உள்ளது.

கோடு பற்றியும், கோட்டு வழக்குகள் பற்றியும், சட்டத்தரணிகள் பற்றியும் அரை வாய்மொழிப் பாடல்கள் பல யாழ்ப்பாணத்திலே பெருமளவுக்கு எழுந்துள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூறிலே, யாழ்ப்பாணத்தில் நடந்த பெண்கடத்தல் வழக்குப் பற்றிய விபரமான செய்திகளைக் குறிப்பிடும் கும்மிப்பாடல்கள், மிக அண்மைக் காலம் வரை (1978-1979) இப்பகுதியில் வாய்மொழியாக வழங்கி வந்துள்ளன.

*"முற்றவெளி பறங்கித் தெரு கோட்டடி*
*முற்றுஞ் சனங்களால் மூடியிருந்தது*
*பத்துநாள் மட்டும் விளக்கம் நடந்தது*
*பாராத நூதனம் பாருமடி"*

*"பட்டியிற் செம்மறியாடு நரிக்குப்*
*பயந்து குனிந்து தலையைப் பதுங்கல் போற்*
*கிட்ட விருந்த தரணி யொருத்தர்*
*கெடிமண்ட வில்லையோ கேளுமடி"*

இவ்வாறு பாடப்பட்ட பாடல்களைக் கொண்ட நூல்களைப் பெறுவது இன்று மிகக் கடினமானது. மேற்படி பாடல், கல்லடி வேலுப்பிள்ளையாற் பாடப்பட்டது என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்து அரசியல் சமூக பொருளாதார, பண்பாட்டுக் கூறுகளையும், வரலாற்றுச் செய்திகளையும் கூறும் கும்மிப் பாடலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகர் லக்ஷணக் கும்மியிலே இடம்பெறும் பிரபல கோட்டு வழக்கு ஒன்றை இவ்விடத்திலே சுட்டிக் காட்டுவது நலம்.

19 ஆம் நூற்றாண்டிலே நடைபெற்ற பொய் மரண சாதன வழக்குப் பற்றிய பல விபரங்களை இக்கும்மிப்பாடலினூடு காணமுடிகின்றது.

*"குருக்கள்மார் பட்டசத்தி லாதனத்துக் காகக்*
*கூல் அப்புக்காத்துத் தொடுத்த பொய்ச் சாதன*
*வழக்குப்போல் முன்னுமறிந்த துண்டோ வந்த*
*வழுவைநீ பார்பின்னே ஞானப் பெண்ணே!*

*கூல் அப்புக்காத்து குழப்பத்தின் மேலே*
*கொழும்பில் இருக்கும் சனங்கள் சகலரும்*
*பேர்பெற்ற கள்ளர்தான் யாழ்ப்பாணத்தா ரென்று*
*பேசுகிறாரெடி ஞானப் பெண்ணே!*

*மானம் மருங்கு பணங்களும் போய்ச்சுது*
*மறிய லிருக்கத் தலையில் விதியாச்சு*
*ஈனமல்லோ வேழைப் பார்ப்பார் பணத்துக்*
*கிவராசைப் பட்டது ஞானப் பெண்ணே!"*

இத்தகைய பாடல்கள் பல இன்றும் யாழ்ப்பாணத்தில் வாய் மொழியாக வழங்கி வருகின்றன. சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப, இக் கும்மிப் பாடல்கள் சிலவற்றை முதியவர்கள் கூறுவதை இக்கட்டுரை ஆசிரியர் நேரடியாகவே கேட்டுள்ளார் (1978–1979)

உத்தியோகர் லக்ஷணக் கும்மியைப் பாடியவரின் பெயரை அறிய முடியவில்லை. ஆனால், கொக்குவில் கிழக்கு M.S. துரை என்பவர் 1936 ஆம் ஆண்டு சோதிடப் பிரகாச யந்திரசாலையில் இதனை இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல்வேறு வகையான அமிசங்களையும், இந் நூலினூடு கண்டுகொள்ளலாம். இந்நூல் பற்றி ஏலவே எம்மால் ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

19 ஆம் நூற்றாண்டிலே வேகமாகப் பரவிய கொலரா' என்னும் நோய் பற்றியும் அரை வாய்மொழிப் பாடல்கள் பல தோன்றின என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய முடிகின்றது. கொலராவைக் கொள்ளை நோய் என்றும் கோதாரிக் கழிச்சல் என்றும் அழைத்தனர். 'கோதாரிக் கழிச்சல் கும்மி' என்று ஒரு நூலைத் தாம் படித்ததாக முதியவர் ஒருவர் என்னிடம் கூறினார் (தகவல் அ.கு.முத்துக்குமாரசாமிப்பிள்ளை 1984)

யாழ்ப்பாணப் பகுதியிலே வெய்யிற் காலங்களில் 'சிரங்கு' என்னும் தோல் நோய் ஏற்படுவது வழக்கம். சிரங்கு பற்றியும் பல அரை வாய்மொழிப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. வகைமாதிரிக்கு இன்றும் யாழ்ப்பாணப் பகுதியில் வழங்கிவரும் சிரங்கு பற்றிய பாடல் ஒன்றைக் காட்டுவோம்.

*"சிரங்கப்பனாரே – குஷ்ட*
*ராஜன் பெற்ற செல்வக் குபேரா*
*அகங்கைக்கும் புறங்கைக்கும்*
*அழகான முழங்கைக்கும்*
*சொறியச் சொறிய – நல்ல*
*சுகத்தை தந்தாயே – சிரங்கப்பனாரே"*

இப்பாடலை நாடகக் கவிமணி M.V.கிருஷ்ணாழ்வார் இயற்றினார் என்று கூறப்படுகிறது. கிருஷ்ணாழ்வார் சிறந்த கவிஞராக, குறிப்பாகச் சரமகவி பாடுவதில் வல்லுநராகத் திகழ்ந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

மலேரியா, சின்னமுத்து. கொப்புளிப்பான் முதலான நோய்கள் பற்றியும் அரை வாய்மொழிப்பாடல்கள் பல இப்பிரதேசத்திலே தோன்றி மறைந்தன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

## சமூக சீர்திருத்தம்

சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்தும் வகையிலே யாழ்ப்பாணப் பிரதேசத்திற் பல அரை வாய்மொழிப் பாடல்கள் தோற்றம் பெற்றுள்ளன. சிறப்பாக மதுவிலக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பாடு பொருளாக அரை வாய்மொழிப் பாடல்களிலே வழங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மக்கள் கூடுமிடங்களான திருவிழாக்கள், சந்தை, கடைத்தெரு முதலான இடங்களிலே, பிரசார நோக்கிலே மதுவிலக்குப் பற்றிய பாடல்கள் பாடப்பட்டன எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சிப் பகுதியில் இன்றும் வழங்கி வரும் அரை வாய் மொழிப் பாடலொன்றை இவ்விடத்திலே சுட்டிக் காட்டலாம்.

*"சோக்கான தென்னங்கள்ளு*
*சொக்கவைக்கும் எந்தன் கள்ளு*
*சோதிச்சுக் குடிச்சுப் பாக்க*
*வாருங்கோ நயினார் - உங்களைச்*
*சூறையாட்டி விழுத்தா விட்டால்*
*கேளுங்கோ நயினார்"*

இப்பாடலை நாடகக் கவிமணி M.V. கிருஷ்ணாழ்வார் இயற்றினார் என்று கூறப்படுகின்றது. (தகவல் - மன்னவன் கந்தப்பு) இப்பாடல், பெரும்பாலும் நாடக மேடைகளில் இடைப்பிறவரலாகப் பாடப்பட்டுக் கையளிக்கப்பட்டதாகும். நாடக விளம்பர நோட்டீசுகளின் மறுபக்கத்தில் மக்கள் விரும்பிக் கேட்கும் பாடல்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதும் உண்டு. அரை வாய்மொழிப் பாடல்களின் நிலைபேற்றிற்கு நாடக மேடைகளும் களனாக அமைந்தன எனக் கருதலாம்.

கள்ளு, சமூகத்தைச் சீரழிப்பதனால் உண்டாகும் தீமைகளைப் பல, பா வடிவங்களிலே பாடிய அரை வாய்மொழிப் பாடற் புலவர்கள், கள்ளுக்குப் பஞ்ச புராணமும் பாடியுள்ளனர்.

நையாண்டி கலந்து, நகைச்சுவையாய் அமைந்த இந்தப் பாடல்கள், அச்சிட்டு வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆனால், வடமராட்சிப் பகுதியில் இன்றும் வாய் மொழியாக வழங்கி வருகின்றது. முதியவர் ஒருவர் தம் நினைவிலிருந்து பாடிக்காட்டிய பாடலொன்றைச் சுட்டிக் காட்டலாம் எனறு எண்ணுகின்றேன். இப்பாடலை என்னிடம் கூறியவர், பாடலுக்கான தலைப்பு – 'கள்ளுக் கடவுள்' என்று கூறினார். இவர், கள்ளுக்கடவுள் பற்றிப் பாடப்பட்ட பஞ்ச புராணத்தில் இரண்டு பாடல்களை என்னிடம் கூறினார்.

பாடல்கள் பின்வருமாறு :-

*தேடுதற்கும் வகையறியேன் - உன்*
*திருக்கோயில் தவறணையைத் தேடிக்கொண்டு*
*ஓடிவரும் பக்தருக்குக் குறைவேயில்லை*
*உன்னுடைய கிருபையினைச் சொல்லிச் சொல்லிப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடுதற்கும் வகையறியேன் பாளைவேந்தா!*
*பாவிகளை மகிழ்விக்கும் பானதேவா!*
*நீடுலகில் எம்போன்ற ஏழைகட்கு*
*நீயின்றி யாருதவி சொல்லுமையா!*

இப்பாடலைத் தேவாரம் என்று கூறியவர், அடுத்துப் புராணத்தைக் கூறினார்.

*சண்டையில் பிறப்பாய் போற்றி!*
*சல்லியைப் பறிப்பாய் போற்றி!*

*பண்டைய முதல்வா போற்றி!*
*பாளையிற் பிறப்பாய் போற்றி!*

*மண்டையை உடைப்பாய் போற்றி!*
*மாதரைக் கெடுப்பாய் போற்றி!*

*கண்டவர் சிரட்டை ஏந்தும்*
*கடவுளே போற்றி! போற்றி!*

(தகவல் ச. சி. பரஞ்சோதி – அல்வாய்)

நல்ல கவித்துவப் பரிச்சயமுள்ள ஒருவராலே தான் இத்தகைய பாடல்களை இயற்ற முடியும். மதுவின் தீமையைக் கண்டித்துப் பாடிய அரை வாய்மொழிப் பாடல்கள் பல இன்றும் வழங்கி வருகின்றன. குறிப்பாகச் சாராயம், விறண்டி, விஷ்கி முதலான மேனாட்டுக் குடிவகைகளைப் பாவிப்பதை மிக வன்மையாகக் கண்டித்துப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

சமூக மாற்றத்தினை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் வகையிலான அரை வாய்மொழிப் பாடல்கள் பல யாழ்ப்பாணத்திலே தோன்றியுள்ளன. உணவு, உடை, உறையுள் என்ற வகையிலே புதியதாக வந்த விடயங்களை நையாண்டி செய்யும் பல அரை வாய்மொழிப் பாடல்கள் தோன்றியுள்ளன. கோப்பி, தேநீர், கோதுமைமா பாவனை முதலானவற்றைப் பற்றிப் பல பாடல்கள் வழங்கி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாலைக் கிருஷ்ணன் பாடி வெளியிட்ட தாலபுரத்தர் கீதம் என்னும் நூலில் இடம்பெற்ற பின்வரும் பாடலைச் சுட்டிக் காட்டலாம்.

*"வந்தம் மாவும் வழுவி – எங்க*
*சொந்தம் மாவும் நழுவி*
*மந்த மாகத் தழுவி – கோ*
*விந்த மாகப் புழுகி –கோ*
*தம்ப மாவும் வந்திருக்கிறா – அவவும்*
*நிந்தமல்லச் சொந்தம்மாவைப் பார்"*

கோதுமை மா பாவனைக்கு வந்த காலத்திலே யாழ்ப்பாணத்தவர்கள் அதனை வரவேற்கவில்லை. என்பதைப் பல செவிவழிக் கதைகளும் நிறுவுகின்றன. பனம் பண்டங்களை முதன்மைப்படுத்திப் பல பாடல்கள் தோன்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் எழுந்த பல அரை வாய்மொழிப் பாட்டுப் புத்தகங்களைப் பார்க்கும் பொழுது நவீனத்துவத்தை எதிர்த்தமையே மேலோங்கிக் காணப்படுகின்றது.

கலிகால வேடிக்கை, கலிகாலக் கும்மி, கலிகால அலங்கோலம், கலிகாலக் காட்சி முதலான பெயர்களிலே பல சிறுசிறு நூல்கள் தோன்றியுள்ளன. கலிகாலம் பற்றிய கருத்துநிலை நமது மரபிலே வேரூன்றியுள்ளமையே இப்பாட்டுப் புத்தகங்களின் தலைப்புக்கள் காட்டி நிற்கின்றன. உதாரணமாக,

*"கலியுகக் காலம் கொடுமை வருமென்று*
*கையிற் கனிபோலச் சொன்னார் -முனிவர்கள்*
*பலவிதத் தாலு மதிகபழுது*
*வருகுது பாரெடி ஞானப் பெண்ணே!*

*(உத். லக்ஷ்ணக் கும்மி)*

மண்டைதீவு அகிலேச சர்மா, கட்டை ஆழ்வார் என அழைக்கப்பட்ட ஜே. எஸ். ஆழ்வாப்பிள்ளை, கிருஷ்ணாழ்வார், பொன்னாலைக் கிருஷ்ணன் முதலானவர்களை அரை வாய்மொழிப் பாடல்கள் பாடியவர்களாக அடையாளங்காண முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவக் கல்விக்கு எதிராக இப்படிப் பல அரை வாய்மொழிப் பாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்கால நாகரீக வேடிக்கைப்பாக்கள் (1933) என்னும் சிறு நூல் பன்னிரண்டு பக்கங்களைக் கொண்டது. நூலின் மூன்றாம் பாகம் என அச்சிடப்பட்டுள்ளது. அந்நூலில் இடம்பெறும் சுதேசிய உணவை வலியுறுத்தல், சுதேச ஆடை, ஆபரணங்களை விலக்குவதால் வருந்தீமை முதலானவற்றையே பாடுபொருளாகக் கொண்டுள்ளன. வகைமாதிரிக்குப் பின்வரும் பாடல்களைச் சுட்டிக் காட்டலாம்.

"அற்புத மற்புத மற்புதமாகிய றப்பர்த் தோட்டம்" என்ற மெட்டு,

*நாட்டிற் கள்ளை வேண்டா மென்று*
*தள்ளுகின்றார் - இப்போ*
*நாகரீக உவிஸ்கி குடித்துத்*
*துள்ளுகின்றார்*
*வீட்டிற் காசை அன்னியர் கையிற்*
*கொட்டுகின்றார்*
*விறண்டிப் பெட்டிக்காகத் தீர்வைக்*
*கட்டுகின்றார்*

இவ்வாறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

பெண்களின் நடையுடை பாவனை பற்றி நையாண்டி செய்யும் அரை வாய்மொழிப் பாடல்கள் உளவேனும், வகைமாதிரிக்கு ஒன்று, "காலக் கொடுமையை நாளுக்கு நாளாக" என்ற மெட்டு,

*கோலக் குயில்மொழி சேலைப் பழிவிழி*
*வாலைப்பெண்க ளலங்காரம் - இந்தக்*
*காலத்திலே மஸ்லின்சேலை யுடுத்திடுவர்*
*காட்சி கொடுத்தல் சிங்காரம்*

*பட்டினங் காப்புக்கல் லட்டியல் தோட்டுக்குங்*
*கெட்டகாலம் வந்துபோச்சே -இப்போ*
*கெட்டிக் கொலிசொடு கொத்தமல்லிக் காப்புக்*
*கஷ்டமான காலமாச்சே"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன. மேலைப்புல நாகரீகத்தின் தாக்கத்தினைக் கண்டிப்பதற்கு வாய்ப்பாகப் பெண்களின் நடையுடை பாவனையைப் பெரும்பாலான அரை வாய்மொழிப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். நம்மால் சேகரிக்கப்பட்ட பாடல்களில் இத்தன்மைத்தான பாடல்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

காலனித்துவத்தை எதிர்ப்பதில் செந்நெறிப் புலவர்களைவிட அரை வாய்மொழிப் பாடலாசிரியர்கள் அதிகமாக ஆர்வங் காட்டினார்கள் எனக் கருதலாம். ஆங்கிலக் கல்வியை ஆதரித்த யாழ்ப்பாணத்தில் அக் கல்வி முறைக்கு எதிராக அரை வாய்மொழிப் பாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடக் கூடிய அமிசமாகும்.

*"பிள்ளைகள் சம்பள மொன்றுபத் தாச்சுது*
*பிரசங்க மல்லாற் படிப்புக் கிடையாது*
*நல்வழி சேர்க்கவோ காசுதான் சேர்க்கவோ*
*நானறி யேனடி ஞானப் பெண்ணே!*
...............................
*அநியாயம் தானிப்போ பாதிரிமார் சேர்ந்து*
*அள்ளுகிறார் காசு ஞானப் பெண்ணே!...."*

*(உத். லக்ஷ்ணக் கும்மி)*

கிறிஸ்தவக் கல்விக்கு எதிராக இப்படிப் பல அரை வாய்மொழிப் பாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமூகச் சீர்திருத்த மொழி நோக்கிலே அரை வாய்மொழிப் பாடல்களைப் பாடிய பலர், நவீன போக்குகளைக் கண்டிப்பதிலே அதிக கவனம் செலுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. மண்டை தீவு அகிலேஸ்வரசர்மா, துன்னைாலை ஜே. எஸ். ஆழ்வாப்பிள்ளை, கல்லடி வேலுப்பிள்ளை முதலானவர்களின் பாடல்கள் பெரும்பாலும் சிறுசிறு அச்சுப்பிரதிகளாக வெளிவந்தன. அவற்றை வாசித்து மகிழ்ந்தவர்களை விட விற்பனை செய்தவர்கள் பாடிக்காட்டியதைக் கேட்டு மகிழ்ந்தவர்களே அதிகம் எனலாம். அதனாலே தான் அவை இன்றும், வாய்மொழியாக வாழுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தாவணி பாவாடை எறிந்தார் - இப்போ*
*சல்லடையாம் சில்க்சைசில் நல்லுடை செய்வார்.*
*பூமணவார் பௌடர் மணப்பார் - இவர்*
*புடைவைகட்டும் வேடிக்கையைப் புகலுவேன் கேளும்*

*அழகான கூந்தலறுப்பார் - இதுவும்*
*ஐரோப்பிய நாகரீக ஆவேசமாம்*
*விழிவிஷேசத்துக்கும் உதவார் - இந்து*
*விதவைகளுங் கூடஇப்போ கூந்தலறுக்கார்"*

*(நாகரிக வேடிக்கைப்பாக்கள்)*

*"வாலிபரோடு குமரிகள் கூடி*
*மருவியிருந்து கடதாசி சொக்கட்டான்*
*ஆடலும் பந்து அடித்தலும் நீதியென்று*
*ஆர்சொல்லு வாரென்று பாருமடி"*

*(அ.தி.அ.கு)*

பெண்களின் நடையுடை பாவனைகளை வன்மையாகக் கண்டித்தமை போலவே இளைஞர்களின் போக்குக்களையும் அரை வாய்மொழிப் பாடல்கள் கண்டித்துள்ளமையைக் காணமுடிகின்றது.

*"அஞ்சு வயசுடைய அகிழானள வாம்பிளையள்*
*பிஞ்சில் பழுக்கிறார் ஐயா — அவர்*
*வந்து மதவடியில் குந்தியிருந்து கொண்டு*
*கலியாணமும் வேணுமாம்"*

*"மேலுதட்டில் ரண்டுஈ ஒட்டினாற் போல*
*மீசை விடுகிறார்கள் - அவர்*
*காலுக்குமேலே கால்போட்டுக் கொண்டு*
*கதைக்கிறாராம் இங்கிலீசு"*

*(ஜே.எஸ். ஆழ்வாப்பிள்ளை)*

ஜே.எஸ். ஆழ்வாப்பிள்ளையிற் பாடப்பட்ட இத்தகைய பாடல்கள் இன்றும் வடமராட்சிப் பகுதியிலே வழங்குகின்றன. (தகவல்: ஆறுமுக உபாத்தியாயர் 1976)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச் செல்நெறியை உடனுக்குடன் படம்பிடித்துக் காட்டிய இத்தகைய அரை வாய்மொழிப் பாடல்கள் காலவெள்ளத்தால் அள்ளுண்டு போனமை கவலை தருவதே.

சமூகத்தைக் கண்டிக்கவும், நவநாகரிகத்தை நகையாடவும் பயன்படுத்தப்பட்ட அரை வாய்மொழிப் பாடல்கள் சமூகத்தை நன்னெறிப்படுத்தவும், வாழ்வியலை வளப்படுத்தவும் உதவின என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின் போது மக்கள் உணவு உற்பத்தியை அதிகரித்துச் சுயதேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயும் அரை வாய்மொழிப் பாடல்கள் தோற்றம் பெற்றுள்ளன. பனையின் பிரயோசனங்களைப் பயன்படுத்தலும், உள்ளூர் உணவுப் பொருள்களான மரவள்ளிக்கிழங்கு, சாமை, தினை, குரக்கன் முதலானவற்றைப் பயிரிடுதல் பற்றியும் பலபாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*"கப்பலு மிங்கே வரத்துக் கிடையாது*
*காசுப் புழக்கங்க ளில்லாத வூரிது*
*இப்படியான இடத்தி லிருந்து நாம்*
*என்ன செய்வோமடி ஞானப் பெண்ணே"*

(*தகவல்: முருகேசு*)

*"சுன்னாகச் சந்தையிலே*
*உன்னாணைச் சேதியக்கை*
*துடைமொத்தம் ஒருகிழங்கு"*

(*தகவல்: கா. சிவத்தம்பி*)

இத்தகைய பாடல்கள் சிறுசிறு நூல்களாகவோ, துண்டுப்பிரசுர மாகவோ அச்சடித்து வெளியிடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் விடயங்களையும் அரை வாய்மொழிக் கவிஞர்கள் பெருமளவுக்குப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையிலே, இன்று நமக்குக் கிடைத்துள்ள பண்ணைப் பாலக் கும்மி, உத்தியோக லக்ஷ்ணக் கும்மி ஆகிய இரண்டும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. உத்தியோக லக்ஷ்ணக் கும்மி யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால ஆட்சிமுறைகளைத் தெளிவாகக் குறிப்பிடுவதோடு, அக்காலத்துப் 'பெரிய மனுஷர்'களின் வாழ்க்கைச் சம்பவங்களையும் சுட்டிக்காட்டுகின்றது. உதாரணமாக,

*"பட்டமும் பெற்றொரு பாரியையுங் கொண்டு*
*பரிசுடன் முத்துக் கிட்டினரும் வந்தார்*
*இட்டமாய் யாவரும்போய் மரியாதையோடு*
*இன்பு கொண்டாடினார் ஞானப்பெண்ணே!"*

*(உ. லக்ஷ். கும்)*

பரிஸ்டர் பட்டம் பெற இங்கிலாந்துக்குச் சென்ற முத்துக் கிருஷ்ணர் அங்கேயே திருமணம் செய்து வெள்ளைக்கார மனைவியுடன் இங்கு வந்தமையை நையாண்டியாக இப்பாடல் சுட்டுகின்றது.

யாழ்ப்பாண அரசதிபராகப் பணியாற்றிய 'டைக்' துரை பற்றி இக்கும்மிப்பாடல் பின்வருமாறு சுட்டுகின்றது.

*"பெற்ற பிதாவிடம் பிள்ளைகள் போய்த்தம்*
*பிரியங்கள் சொல்லிப் பெறுவதுபோல்*
*உற்ற யாழ்ப்பாணச் சனத்துக்கெல்லாம் - நல்ல*
*உபகாரி தானவர் ஞானப்பெண்ணே!"*

அக்காலத்து ஆட்சியாளர்கள் பலரைக் கண்டித்துப் பாடிய பல பாடல்களினூடே இத்தகைய பாராட்டுப் பாடல்களும் இல்லாமலில்லை.

வேறு இலக்கியங்களிலே இடம்பெறாத அரசியல் சார்பான பல விடயங்கள் உத்தியோகர் லக்ஷ்ணக்கும்மியிலே இடம்பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. எழுத்துநிலைப்பட்ட இப்பாடல்கள் மிக அண்மைக்காலம் வரை வாய்மொழியாகவே வழங்கி வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மண்டைதீவு அகிலேஷ்வரசர்மா பாடிய பண்ணைப்பாலக் கும்மி, பண்ணைப்பாலம் அமைப்பது தொடர்பாக எழுந்த அரசியற் பின்னணியையும், பிரச்சினைகளையும் மிக விரிவாகச் சுட்டிக் காட்டுகின்றது. பண்ணைப்பாலக் கும்மிப்பாடல் கையெழுத்துப் பிரதியாகவிருந்து 1986 ஆம் ஆண்டு இ. வே. பாக்கியநாதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப்பதிவு வருவதற்கு முன்னரே இது அச்சிடப்பட்டதா என்பதை அறிய முடியவில்லை.

*"தீவுப்பகுதியை யாழ்ப்பாணத் தோடே*
*சேர்த் திணைத்துப் பாலங்கட்டி விட்டால்*
*காவிச் சுமக்கிற தீவுநாட்டார்க்கு நற்*
*காலம் வருமென்றார் பாருமடி"*

இவ்வாறு தொடங்கும் இக்கும்மிப் பாடலில் 142 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இருபது பக்கங்களில் அமைந்த இந்நூலில் அக்கால அரசியற் பிரச்சினைகள், ஆட்சியாளர்களின் குளறுபடிகள் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளன. இப்பாடல்களை அரை வாய்மொழி Orature யாகக் கொள்ளலாமா? என்பதும் ஆய்வுக்குரியது.

தேர்தல் காலங்களிலே அரசியல்சார்பான பலபாடல்கள் தோன்றியுள்ளன. இவை அரசியல் மேடைகளிற் பாடப்பட்டதோடு. துண்டுப்பிரசுரமாகவும் ( நோட்டீஸ் ) வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. பிரபலமான சினிமாப் பாட்டுக்கள், கீர்த்தனைகளே இவற்றுக்கு வர்ணமெட்டாக அமைந்தன.

யாழ்ப்பாணத்தில் அரை வாய்மொழிப்பாடல்கள் பயின்றுவருவதற்குத் தென்னிந்தியப் பாட்டுப் புத்தகங்கள் இங்கு விற்பனை செய்யப்பட்டமையும் ஒரு காரணமாகலாம். இந்த இடத்திலே வேங்கடாசலபதி குறிப்பிடும் கருத்தொன்றினை நினைவுபடுத்துவது நன்று. "தமிழகத்தில் அச்சிடப்பட்ட குயிலி நூல்கள் ஈழத்தில் பரவியிருப்பது உறுதி. ஆனால், அங்கேயே குயிலி இலக்கியம் உற்பத்தியாகி உள்ளதா? என்று அறிய இயலவில்லை"[5] ஈழத்திலே குயிலி என இலக்கியம் என அழைக்கப்படும் அரை வாய்மொழிப் பாடல்கள் நிறையவே தோன்றியுள்ளன என்று உறுதியாகக் கூறலாம். பிரபல புத்தகக் கடைகளிலன்றி சந்தை, கோயில் விழாக்களில் நூல்களைப் பரப்பி விற்பவர்களூடேதான் இத்தகைய புத்தகங்கள் பொதுமக்களைச் சென்றடைந்தன. இதனாலே, பெரும்பாலும் சமூக அடித்தளமக்கள் மத்தியிலேயே வாய்மொழியாக வழங்கி வந்தது – வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறைவாக....**

- தமிழிலே நிண்ட நெடுங்காலமாக நிலவிவந்த கவிதைப் பாரம்பரியத்தில் ஒருவகை வெளிப்பாடாக அரை வாய்மொழிப் பாடல்கள் அமைந்தன.
- அச்சியந்திரத்தின் பயன்பாட்டால் வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்த பாடல்கள் அச்சுவாகனம் ஏறிப் பவனி வந்தன.
- அச்சிலிருந்து வாய்மொழிக்கும். வாய்மொழியிலிருந்து அச்சுக்கும் அரை வாய்மொழிப் பாடல்கள் பரஸ்பரம் மாற்றமடைந்தன.
- அரை வாய்மொழிப் பாடல்கள் சமூகப் பிரக்ஞையுடன் தோற்றம் பெற்று வந்ததோடு உயர் இலக்கியங்கள் சொல்லாத சேதிகளையும் சொல்லியது.
- சாதாரண மக்களுக்கு உணர்வூட்டுவதோடு, அறிவூட்டுவதாகவும் அரை வாய்மொழிப் பாடல்கள் அமைந்தன.
- பொதுமக்களை நோக்கி எழுந்தமையாலே பேச்சு வழக்குச் சொற்கள், பிறமொழிச் சொற்கள் அரை வாய்மொழிப் பாடல்களில் நிரம்பவே இடம்பெற்றுள்ளன.
- இந்திய நாட்டு இலக்கியங்களின் பயன்பாடும், குறிப்பாக இரத்தின நாயக்கர் அன்சன்ஸ் பதிப்பு நூல்களின் தாக்கமும் அரை வாய்மொழிப் பாடல்களின் தோற்றத்துக்குக் காரணமாயின எனலாம்.
- படிப்பறிவுள்ள, படிப்பறிவற்ற இருபாலாரும் இப்பாடல்களை இயற்றியும், பாடியும் வந்துள்ளனர்.
- யாழ்ப்பாணத்திலே பெண்களும் அரை வாய்மொழிப் பாடலாசிரியர்களாக இருந்துள்ளனர் என்பதுங் குறிப்பிடத்தக்கது.
- அரை வாய்மொழிப் பாடல்களும் செந்நெறிப்பாடல்களும் சங்கமிக்கும் நிலைமையும் இருந்துள்ளது.
- இப்பாடல்கள் தோன்றிய தளமும் இவை கையளிக்கப்பட்ட களமும் சமூக அடுக்கமைப்பைப் புலப்படுத்துகின்றன.

**உசாத்துணை**


- அகிலேஸ்வரசர்மா. சி. – மண்டைதீவு பண்ணைப்பாலக் கும்மி
- பாக்கியநாதன். வே. இ - (பதி. 1986)
- அகிலேஸ்வரசர்மா. சி. – தற்கால நாகரீக வேடிக்கைப்பாடல்கள் (மூன்றாம் பாகம்)
- சோதிடப்பிரகாச யந்திரசாலை (இரண்டாம் பதிப்பு -1933)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அழகம்மா திருமண அலங்கோலக் கும்மி – வீணாகான தேயாப்த சங்கத்தாரால் செய்யப்பட்டது. விசயபுரம் சுந்த சந்திரோதய யந்திரசாலையில் பதிக்கப்பட்டது. (ஆண்டு இல்லை)
- வித்தியாவல்லி அம்மாள் M.R. ஸ்ரீமான் சேனாதிராசா கொலை விசித்திரக் கவிகள்
- யாழ்ப்பாணம் கிளப் அச்சியந்திரசாலை அக்ஷய வருஷம் பங்குனி
- வேங்கடாசலபதி. ஆ. இரா. முச்சந்தி இலக்கியம்,
- காலச்சுவடு பதிப்பகம் நாகர்கோயில் 2004
- கிருஷ்ணபிள்ளை. க. பொன்னாலை வரகவி –பனைப்பாட்டு அல்லது தாலபுரத்தார் கீதம்.
- ஆனந்தா அச்சகம் யாழ்ப்பாணம் -1956
- சுரேஷ் கனகராஜா – வாய்மொழி மரபும், எழுத்தறிவு மரபும்
- பண்பாடு மலர் மூன்று இதழ் ஒன்று 1993 வைகாசி
- யோகராசா. செ - ஈழத்தின் (இன்னொரு வகையான) வாய்மொழிப்பாடல் பாரம்பரியம் ஆய்வரங்கக் கட்டுரை - உயர் பட்டப் படிப்புக்கள் பீடம், யாழ் பல்கலைக்கழகம் 2002
- யோகராசா. செ - மூன்றாவது வகையான இலக்கியப் பாரம்பரியம் - ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு –பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்குக் கிழக்கு மாகாணம் -2002
- கார்த்திகேசு சிவத்தம்பி – தமிழில் கவனிக்கப்படாத ஒரு இலக்கிய வகை – எழுத்துநிலை பெற்ற வாய்மொழிப் பாடல் மரபு (Semioral)


## அடிக்குறிப்பு.....

1. சுரேஷ் கனகராஜா
2. வேங்கடாசலபதி ஆ. இரா.
3. சண்முகம் செ.வை. - இலக்கிய உருவாக்கம், பண்பாடு (செப் - 1985)
4. வேங்கடாசலபதி ஆ. இரா.
5. வேங்கடாசலபதி ஆ. இரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Velautham Maha Vidyalayam

## OBA Colombo Branch

Office bearers elected at AGM on 18.04.2010

| S/No | Name | Post Held |
|---|---|---|
| 1 | S. Ehamparanathan | President |
| 2 | M. Thayaparan | Vice President |
| 3 | Raj Subramaniam | Vice President |
| 4 | M. Sivalingam | Secretary |
| 5 | M. Yoganathan | Asst. Secretary |
| 6 | V. Sethunayagam | Treasurer |
| 7 | Siva Krishnamoorthy | Asst. Treasurer |
| 8 | S. Rajendra | Ex.Co.Member |
| 9 | K. Kamaleswaran | Ex.Co.Member |
| 10 | G. Soccalingam | Ex.Co.Member |
| 11 | A. Velmurugu | Ex.Co.Member |
| 12 | B. Vairavanathan | Ex.Co.Member |
| 13 | S. Sadachcharanathan | Ex.Co.Member |
| 14 | V. Arulananthasiva | Ex.Co.Member |
| 15 | R. Raveendran | Ex.Co.Member |
| 16 | V. Sitsabesan | Ex.Co.Member |
| 17 | S. Balakrishnan | Ex.Co.Member |
| 18 | S. Balasankar | Ex.Co.Member |
| 19 | S. Varnakulasingam | Ex.Co.Member |
| 20 | S. Gowri Sankar | Ex.Co.Member |

| | | |
|---|---|---|
| 1 | K. Ganeshalingam | Auditor |
| 2 | K. Sri Ranganathan | Auditor |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி...



பேராசிரியர் சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா வடமராட்சியைச் சேர்ந்த கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி பயின்ற இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப்பாடமாகக் கற்று முதற்பிரிவிலே தேறியவர். தொடர்ந்து முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். பேராசிரியர்கள் கைலாசபதி, வித்தியானந்தன், சிவத்தம்பி, சண்முகதாஸ் முதலியோரிடம் கற்றவர்.

ஆ. தா. சுப்பிரமணியம், பண்டிதர் க. வீரகத்தி முதலானோரிடம் தமிழை வரன்முறையாகக் கற்றவர். பல்கலைக்கழகக் கல்விக்கு முன்னரே பாலபண்டிதர், சைவப்புலவர் பரீட்சைகளிற் தேறியவர்.

வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும், இலக்கிய வளமும் வித்துவ சிரோன்மணி கணேசையரின் வாழ்வும் பணியும், ஈழத்து இலக்கியச் செல்நெறி, பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கல்வி, யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள், ஈழத்துத் தமிழ் உரை மரபு, சொல்லினால் ஒரு மாளிகை (கவிதைத் தொகுப்பு) முதலான நூல்களின் ஆசிரியர்.

வித்துவ சிரோன்மணி கணேசையரின் அகநானூறு உரை, மங்களநாயகம் தம்பையாவின் நொறுங்குண்ட இதயம் ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர்.

சர்வதேச தமிழியல் ஆய்வரங்கங்கள் பலவற்றிலே கலந்து கொண்டவர்.

இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

Printed by : Unie Arts (Pvt) Ltd. Colombo - 13. Tel : 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org